RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI


தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 278 | அக்டோபர்.9 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## நடிகை வழக்கில் மன்னிப்பு கோரினார் சீமான்: வழக்கை முடித்து வைத்தது உச்ச நீதிமன்றம்!





புதுடெல்லி: அக்.9-

நடிகை வழக்கில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். இதேபோல் சீமானுக்கு எதிரான புகாரை திரும்ப பெறுவதாக நடிகை தரப்பு தெரிவித்துள்ளது. இரு தரப்பும் பரஸ்பரம் மன்னிப்பு கோரியதால் வழக்கு முடித்து வைக்கப்படுவதாக உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டதாக நடிகை விஜயலட்சுமி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமானுக்கு எதிராக வளசரவாக்கம் போலீஸில் கடந்த 2011ம் ஆண்டு புகார் அளித்திருந்தார். அந்தப் புகாரின்பேரில் சீமான் மீது போலீஸார் பல்வேறு பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கை ரத்து செய்ய முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்த உத்தரவை எதிர்த்து சீமான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கு கடந்த செப்டம்பர் 24 அன்று விசாரித்த நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, 'இருவரும் தங்களது குற்றச்சாட்டுகளை திரும்பப் பெற்று பரஸ்பரம் மன்னிப்புக் கோரி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக சீமானும், விஜயலட்சுமியும் ஊடகங்களிலோ அல்லது சமூக வலைதளங்களிலே எந்தப் பேட்டியும் தரக்கூடாது. இந்த உத்தரவை மீறினால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க நேரிடும்'' என்றும் எச்சரித்தனர்

இந்த நிலையில், சீமான் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், நடிகை குறித்து இனி கருத்து தெரிவிக்க மாட்டேன் என்றும், நடிகை குறித்த கருத்துகளை திரும்பப் பெறுவதாகவும் சீமான் தரப்பு கூறியுள்ளது. அதேபோல, சீமானுக்கு எதிரான புகாரை திரும்பப் பெறுவதாக நடிகை தரப்பும் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தது. இருதரப்பும் பரஸ்பரம் மன்னிப்பு கோரியதால் இந்த வழக்கு முடித்து வைக்கப்படுவதாக உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## எஸ்.ஐ, தீயணைப்புத் துறை காலி பணியிட இறுதி தேர்வு பட்டியலை வெளியிட ஐகோர்ட் 30 நாட்கள் கெடு



சென்னை: அக்.9-

தமிழகத்தில் காலியாக உள்ள 621 காவல் உதவி ஆய்வாளர்கள், 129 தீயணைப்புத் துறை நிலைய அதிகாரிகள் பணியிடங்களுக்கான இறுதி தேர்வுப்பட்டியலை 30 நாட்களில் வெளியிட தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் காலியாக இருந்த 621 காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கும், 129 தீயணைப்புத் துறை நிலைய அதிகாரிகள் பணியிடங்களுக்கும் விண்ணப்பங்கள் வரவேற்று, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம், கடந்த 2023 ம் ஆண்டு அறிவிப்பு வெளியிட்டது. எழுத்துத் தேர்வு, உடல் தகுதி தேர்வு, நேர்முக தேர்வு போன்ற தேர்வு நடைமுறைகள் முடிந்து 2024 ஜனவரி மாதம் தற்காலிக தேர்வு பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில் இடஒதுக்கீட்டு நடைமுறைகள் முறையாக பின்பற்றவில்லை என தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், தவறுகளை திருத்தி, திருத்தியமைக்கப்பட்ட தேர்வுப் பட்டியல் வெளியிடப்படும் என அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்ட உயர் நீதிமன்றம், வழக்கை முடித்து வைத்தது.

இந்நிலையில், 2024 ம் ஆண்டு அக்டோபர் 3 ம் தேதி திருத்தியமைக்கப்பட்ட தற்காலிகத் தேர்வுப் பட்டியலை சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் வெளியிட்டது. முதல் பட்டியலில் இடம் பெற்றிருந்த பல விண்ணப்பதாரர்களின் பெயர்கள், இந்த பட்டியலில் இடம் பெறவில்லை என, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை விசாரித்த தனி நீதிபதி, திருத்தி அமைக்கப்பட்ட தற்காலிக தேர்வுப் பட்டியலை ரத்து செய்து உத்தரவிட்டார். மேலும், இடஒதுக்கீட்டு முறைகளை பின்பற்றி, புதிய தேர்வுப் பட்டியலை தயாரிக்க, ஜம்மு ரூ காஷ்மீர் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி என்.பால்வசந்தகுமாரை நியமித்தும் உத்தரவிடப்பட்டது.

புதிய தேர்வுப் பட்டியலை மூன்று மாதங்களுக்குள் தயாரித்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர் வசம் ஒப்படைக்க வேண்டும் எனவும், அவர் அதனை வெளியிட வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தரவின் அடிப்படையில், திருத்தியமைக்கப்பட்ட தேர்வு பட்டியலுடன் கூடிய அறிக்கையை, ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி பால்வசந்தகுமார் சமர்ப்பித்தார்.

ஆனால், ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி தயாரித்த பட்டியல் முறையாக இல்லை என்பதால், அந்த பட்டியலை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் எனவும், இப்பணியிடங்களுக்கு மீண்டும் தேர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார் மற்றும் ஹேமந்த் சந்தன்கவுடர் அமர்வு, ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி, இட ஒதுக்கீடு நடைமுறை, உச்ச நீதிமன்ற தீர்ப்பை பின்பற்றியும், தமிழில் படித்தவர்களுக்கு முன்னுரிமை சட்டத்தை பின்பற்றியும் தேர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் எந்த விதிமீறலும் இல்லை. தனி நீதிபதி உத்தரவை ஏற்றுக் கொண்ட நிலையில், தாமதமாக இந்த மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறி, சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் மேல் முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேலும், ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி பால்வசந்த குமார் அளித்த அறிக்கையின் அடிப்படையில், 30 நாட்களில் இறுதி தேர்வு பட்டியலை வெளியிட வேண்டும் என சீருடைப் பணியாளர் தேர்வாணையத்துக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## கரூர் செல்லும் விஜய்க்கு பாதுகாப்பு கேட்டு டிஜிபி அலுவலகத்தில் தவெகவினர் மனு



சென்னை: அக்.9-

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பங்களை தவெக தலைவர் விஜய் நேரில் சென்று சந்திக்க அனுமதியும், பாதுகாப்பும் கேட்டு டிஜிபி அலுவலகத்தில் நேற்று (அக்.8) மனு கொடுக்கப்பட்டுள்ளது.

கரூர் வேலுசாமிபுரத்தில் செப்.27ல் நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். முதல்வர் ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கரூர் வந்து, உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்திய நிலையில், தவெக தலைவர் விஜய் மட்டும் கரூர் செல்லாதது கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, விஜய்யும், அவரது கட்சியினரும் தொண்டர்களை நிராதரவாக விட்டுவிட்டு ஓடிவிட்டதாக நீதிபதியும் குற்றம் சாட்டினார்.

இதனைத் தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த நபர்களின் உறவினர்களிடம் தவெக தலைவர் விஜய் கடந்த 2 நாட்களாக வீடியோ கால் மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்து வருகிறார். இந்த சூழலில், கரூர் கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பங்களை தவெக தலைவர் விஜய் நேரில் சென்று சந்திக்க அனுமதியும், பாதுகாப்பும் கேட்டு டிஜிபி அலுவலகத்தில் இன்று அக்கட்சியின் தரப்பில் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

டிஜிபியிடம் மனு கொடுத்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தவெக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் அறிவழகன், "தவெக தலைவர் விஜய் கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறுவதற்கு அனுமதி கேட்டும், அவருக்கு உரிய பாதுகாப்பு கேட்டும் காவல்துறை தலைவரிடம் மனு கொடுத்துள்ளோம்'' என்றார். ஆனால், எப்போது விஜய் கரூர் செல்லவுள்ளார் என்பது குறித்த கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கவில்லை.

முன்னதாக, இன்று காலையில் கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய தவெக நிர்வாகி அருண்ராஜ், "கரூரைச் சேர்ந்த 33 நபர்களின் உறவினர்களிடம் எங்கள் கட்சித் தலைவர் வீடியோ கால் மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்துள்ளார். அவர் பேசும் போது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீங்கள் தைரியமாக இருங்கள். தொடர்ந்து போராடுங்கள். என்று ஆறுதல் கூறினர். பாதிக்கப்பட்டவர்களை விரைவில் விஜய் நேரில் வந்து சந்திக்க உள்ளார். இது தொடர்பாக டிஜிபி அலுவலகத்துக்கு இமெயில் மூலமாக அனுமதி கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இன்று டிஜிபி அலுவலகத்துக்கு நேரில் சென்று அனுமதி கேட்க இருக்கிறோம். அரசு நடவடிக்கைகள் குறித்து இப்போது கருத்து சொல்ல விரும்பவில்லை'' என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.

## தஷ்வந்த் விடுதலை குழந்தைகள் பாதுகாப்பு வரலாற்றில் ஒரு கருப்பு நாள்: அன்புமணி





சென்னை: அக்.9-

6 வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற தஷ்வந்த் விடுதலை செய்யப்பட்டிருப்பது குழந்தைகள் பாதுகாப்பு வரலாற்றில் இன்று ஒரு கருப்பு நாள் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை போரூரை அடுத்த மவுலிவாக்கத்தில் 6 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் தஷ்வந்த் என்ற இளைஞருக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனை மற்றும் 46 ஆண்டுகள் சிறை தண்டனையை ரத்து செய்து அவரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது.

மனித மிருகங்களால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு நீதி பெற்றுத் தருவதில் நாம் எந்த அளவுக்கு வலிமையற்று இருக்கிறோம் என்பதற்கு இந்த வழக்கு வேதனையான எடுத்துக்காட்டு ஆகும்.

வீட்டுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த 6 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்தததுடன், தடயங்களை அழிக்கும் நோக்குடன் சிறுமியின் உடலையும் எரித்ததாக அதேபகுதியைச் சேர்ந்த தஷ்வந்த் என்ற மென்பொருள் பொறியாளர் கைது செய்யப்பட்டார். அடுத்த சில மாதங்களில் இந்த வழக்கில் பிணையில் வந்த தஷ்வந்த் தமது தாயையும் படுகொலை செய்து விட்டு தப்பி ஓடிவிட்டார்.

பின்னர் மும்பையில் கைது செய்யப்பட்ட அவருக்கு குழந்தை பாலியல் வன்கொடுமை மற்றும் படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனையும், மொத்தமாக 46 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தும் செங்கப்பட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றமும் உறுதி செய்த நிலையில் தான் உச்சநீதிமன்றத்தில் தஷ்வந்த் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காணொலி மற்றும் கண்காணிப்பு கேமரா காட்சிகள் போதுமானவை அல்ல, டி.என்.ஏ சோதனை முடிவுகள் ஒத்துப்போகவில்லை என்று கூறி அவரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது. தமிழ்நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு வரலாற்றில் இன்று ஒரு கருப்பு நாள்.

தாயை கொலை செய்த வழக்கிலும் பிறழ்சாட்சியத்தை பயன்படுத்தி கடந்த மாதம் தஷ்வந்த் விடுதலையான நிலையில், இப்போது இந்த வழக்கிலிருந்தும் விடுதலையாகியுள்ளார். இந்த வழக்கில் தஷ்வந்த் தவறு செய்யவில்லை என்றால் சிறுமியை கொலை செய்தது யார்? என்ற வினா எழுகிறது. இந்த வழக்கில் தொடக்கத்திலிருந்தே விசாரணை சரியாக நடைபெறவில்லை. 3 மாதங்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததால் தஷ்வந்துக்கு பிணை கிடைத்தது. அப்போதிலிருந்தே இந்த வழக்கு தடம் மாறத் தொடங்கி விட்டது.

தமிழ்நாட்டையே உலுக்கிய இந்த வழக்கில் வலிமையான ஆதாரங்களை காவல்துறை தாக்கல் செய்திருக்க வேண்டும். டி.என்.ஏ ஆய்வு முடிவுகள் கூட ஒத்துப்போகும் வகையில் இல்லாததால் தான் தண்டிக்கப்பட்ட குற்றவாளி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். குழந்தைகள் தான் வாழும் தெய்வங்கள். அவர்களை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த மனித மிருகத்துக்குக் கூட தண்டனை பெற்றுத்தர முடியவில்லை என்றால் நமது சட்ட செயலாக்க அமைப்பும், வழக்கு நடத்துவதற்கான கட்டமைப்பும் எந்த அளவுக்கு பலவீனமாக உள்ளன என்பதை புரிந்து கொள்ளலாம். இதற்காக அரசும், காவல்துறையும் தலைகுனிய வேண்டும்.

இனிவரும் காலங்களிலாவது இது போன்ற கொடிய வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். சிறுமி பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் தஷ்வந்த் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து மறுஆய்வு மனுவை அரசு தாக்கல் செய்ய வேண்டும்.'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கள்ளக்குறிச்சிக்கு வழி தெரியாது; காசாவை பற்றி கவலை எதற்கு? ஸ்டாலினை சாடிய அண்ணாமலை



சென்னை: அக்.9-

கள்ளக்குறிச்சியில் மக்களை காவு கொடுத்த முதல்வர் ஸ்டாலின், காசாவிற்கு கருணை காட்ட சொல்வது ஆகசிறந்த நகைச்சுவை என்று பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

காசா இனப்படுகொலையைக் கண்டித்தும் சுதந்திர பாலஸ்தீனம் அமைய ஆதரவு தெரிவித்தும் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் சிபிஎம் சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "காசாவில் உலகமே பார்க்க இஸ்ரேல் நடத்தி வரும் அப்பட்டமான மனித உரிமை மீறல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது; உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டியது!

எங்கோ நடக்கிறது என்று உலகின் மிகப் பெரும் ஜனநாயகமான இந்தியா இந்த விவகாரத்தில் கண்மூடி இருக்கக் கூடாது. பாலஸ்தீனத்தைத் தொடக்கத்திலேயே அங்கீகரித்த கொள்கையுடைய இந்தியா மீண்டுமொருமுறை வரலாற்றில் சரியான முடிவை எடுக்க வேண்டிய நேரம் இது.

இதற்காக ஒன்றிய அரசை வலியுறுத்தி, வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே தீர்மானம் கொண்டுவரப்படும்! மனிதம் காப்போம்.'' என தெரிவித்தார். இந்த கருத்தை தனது ட்விட்டர் பக்கத்திலும் அவர் பதிவிட்டுள்ளார்.

முதல்வரின் பதிவை டேக் செய்து பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில், "கள்ளக்குறிச்சிக்கு வழி தெரியாதவர்களுக்கு காசாவை பற்றிய கவலை எதற்கு முதல்வர் ஸ்டாலின் அவர்களே? உள்ளூர் நிலைமையே ஊசலாடும் போது உலக அரசியல் உங்களுக்கு தேவைதானா?

பாலஸ்தீனத்திற்கு விடிவு காலம் பிறக்க வேண்டும் என பேசும் உங்களால் வேங்கைவயல் போன்ற கொடுமைகளில் இருந்து மக்களை விடுவிக்க முடியவில்லையே ஏன்?. கள்ளக்குறிச்சியில் மக்களை காவு கொடுத்த நீங்கள் காசாவிற்கு கருணை காட்ட சொல்வது ஆகசிறந்த நகைச்சுவை.'' என விமர்சித்துள்ளார்.



# உலக அளவில் புகழ்பெற்ற விஜடி சார்பில் போபால் விஜடியில் இந்தியாவின் நாட்டுப்புற பாரம்பரிய 'சமஸ்கிருத சமகம்' 11அக் 2025 விழா அழைப்பிதழ்

புது டெல்லி, அக்.09- (வேலூர் மாவட்டம்) உலக அளவில் புகழ்பெற்ற விஜடியின் வேந்தர் ஜி.விஸ்வநாதன், துணைத் தலைவர் ஜி.வி.சங்கர் ஆகியோர், டெல்லி முதல்வர் ரேகா குப்தாவை நேரில் சந்தித்து, இந்தியாவின் பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற பாரம்பரியத்தின் ஒரு பிரமாண்டமான கொண் டாட்டமான 'சமஸ்கிருத சமகம்' அக்டோபர் 11, 2025 போபாலில் உள்ள ஷியாமலா ஹில்ஸில் உள்ள ஆவ்ரிதி இந்திரா காந்தி ராஷ்ட்ரிய மானவ் சங்கராலயாவில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்புதந்துள்ளனர். இந்நிகழ்வின் போது விஜடி குழும அலுவலர்கள் பணியாளர்கள் உடனிந்தனர்.



■ வேலூர் மாவட்டம், காட்பாடியில் ரூ.1.87 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலக கட்டடத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கடந்த (07.10.2025), அன்று வணிகவரி (ம) பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, முன்னிலையில் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், வேலூர் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமுலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார். மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார். காட்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் வே.வேல்முருகன், ஒன்றியக்குழுத்துணைத்தலைவர் எஸ்.சரவணன், 5 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சித்ரா மகேந்திரன், துணை பதிவுத்துறை தலைவர் இ.அருள்சாமி, மாவட்ட பதிவாளர் மு.ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பல்லாவரம் பெரிய ஏரியில் ஆகாயாத் தாமரை அகற்றல் மற்றும் மீட்டெடுப்பு பணிகளைத் தொடங்கபட்டது

பல்லாவரம், அக்.09- செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் பெரிய ஏரியில் ஆகாயாத் தாமரை அகற்றல் மற்றும் மீட்டெடுப்பு பணிகளைத் தொடங்கும் விழா இன்று 200 அடி ரேடியல் சாலையில் கோனே இந்தியா, எக்ஸ் நோரா இன்டர்நேஷனல் ஃபவுண்டேஷன் மற்றும் தமிழ்நாடு அரசின் நீர்வள த்துறை ஆகியவற்றின் இணைந்து செயல்படும் பணி ஆகும். இந்த பணி துவக்க விழாவில் எக்ஸ்நோரா இன்டர் நேஷனல் ஃபவுண் டேஷனின் தலைவர் எஸ். செந்தூர் பாரி அவர்கள் கூட்டத்தில் வரவேற்பு ஆற்றினார். அப்போது வெள்ள சவால்களைத் தீர்க்க நிலைத்தன்மையான தீர்வுகளை செயல்படு த்துவதில் கோன் இந்தியா, நீர்வளத்துறை மற்றும்




எக்ஸ்நோராவின் இணைந்த உறுதிப்பாட்டைப் பாராட்டினார். இத்தகைய கூட்டுறவுகள் நகரின் நீர்வளங்களைப் பாதுகாப்ப தற்கும், சரியான நேரத்தில் தலையீடுகள் மூலம் பேரழிவுகளைத் தடுப்பதற்கும் முக்கிய மானவை என்று அவர் வலியுறுத்தினார். கோனே இந்தியாவின் மூத்த மேலாளர் ஜி. தியாகராஜன் அவர்கள் பேசுகையில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைகான கோனேயின் ஒத்துழைப்பை மீண்டும் உறுதி படுத்தி பேசினார். இது நீண்டகால சமூக தாக்கத்தை உருவாக்கும் அர்த்தமுள்ள சிஎஸ்ஆர் முயற்சிகள் மூலம் நடைபெறுகிறது என்று கூறினார். இந்த விழாவில்

நீர்வளத்துறையின் அதிகாரிகள் பொறி யாளர் இன்சீஃப் எஸ்.கோபால கிருஷ்ணன் மற்றும் சிஇ (ஜிஎல்); எம். மகேஷ் நாகராஜன், சூப்பரிண் டெண்டிங் இன்ஜினியர், பாலார் பேசின் சர்க்கிள்; மற்றும் ஆர். அருண் மொழி, எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர், லோயர் பாலார் பேசின் டிவிஷன் ஆகியோர் இணைந்து எக்ஸ்க வேட்டரை கொடிய சைத்து பணியை துவக்கி வைத்தனர். இதன் மூலம் பெரிய ஏரியில் ஆகாயாத் தாமரை அகற்றல் மற்றும் மீட்டெடுப்பு பணிகளைத் தொடங்கப்பட்டன. இந்தத் திட்டம், நீரோட்டத்தை மேம்படுத்துதல், நிலத்தடி நீர் அதிகரித்தல் மற்றும் மழைக்காலத்திற்கு முன்பு சுற்றுப் புறப் பகுதிகளில் வெள்ள ஆபத்துகளை கணிசமாகக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு ள்ளது இந்த நிகழ்ச்சியில் எக்ஸ்னோராவின் பொருளாளர் சுப்பிரமணி, தாம்பரம் மாநகராட்சி ஒருங்கிணைப்பாளர் வி.சீதாராமன், நன்மங்கலம் ஏறி மீட்பு குழு தலைவர் ஜெயப்பிரியா, பொருளாளர் சிவசங்கரி நல சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



# நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் நிலவேம்பு கசாயம் வழங்குதல்

சிவகங்கை, அக்.09- சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா, கோவி லூரில் உள்ள நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூ ரியில் குன்றக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக மாணவர்களுக்கு நில வேம்பு கசாயம் வழங்கப்பட்டது. நிகழ்வின் தொடக்க த்தில் கல்லூ ரியின் நாட்டு நல பணித்திட்ட ஒருங்கி ணைப்பாளர் முனை வர். பா. திருக்குமரன் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கலா நிலவேம்பு கசாயத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்தி மாணவர்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கினார். நிகழ்வின் இறுதியாக நாட்டு நல பணித்திட்ட ஒருங்கி ணைப்பாளர் ஆ. நிஜந்தன் நன்றியுரை நல்கினார்.



■ மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், காரைக்கேணி ஊராட்சியில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் ரூ.12.39 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றாங்கால் பண்ணையில் நடைவு செய்து வளர்க்கப்பட்டு வரும் செடிகளின் நகங்கள் மற்றும் செடிகளின் விற்பனை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் கேட்டறிந்தார்.



■ மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், எல்.கொட்டாணிப்பட்டி ஊராடசியில் உள்ள அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பொது நூலகத்தில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.1.82 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள மராமத்து பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., பார்வை யிட்டார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜமார்த்தாண்டன் உதவி செயற்பொறியாளர் விஜய சித்ரா, உதவி பொறியாளர்கள் நேரு, கணேஷ்குமார் உடனிருந்தனர்.

# சென்னை வேப்பரியில் மா அபாகஸ் நடத்திய மாபெரும் தேசிய அளவிலான அபாகஸ் போட்டியில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு

சென்னை, அக்.09- மாணவர்களின் படைப்பாற்றல், தன்னம் பிக்கை, பகுப்பாய்வு திறனை மேம்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசு மற்றும் சான்றிழதழ்கல் வழங்கப்பட்டது.

சென்னை வேப்பேரியில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் மா அபாகஸ் நிறுவனம் மாணவர்களின் படைப்பா ற்றல், தன்னம்பிக்கை, பகுப்பாய்வு திறனை மேம்படுத்தும் வகையில் தேசிய அளவிலான நேசனல் சாம்பியன்சிப் 2025 அபாகஸ் போட்டிகள் நடத்தப்பட்டது.




நிகழ்ச்சிக்கு மா அபாகஸ் நிறுவத்தின் நிர்வாக இயக்குனர் காம்னி முகர்ஜி மற்றும் சி.இ.ஒ அபிஷேக் முகர்ஜி ஆகியோர் தலைமை

தலைமை தாங்கினர். இதிலல் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வயது வாரியாக பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்ட குறைந்த நேரத்தில் அதிக கணக்குகள் தீர்வு செய்யப்பட்ட மாணவர் களுக்கு வெற்றி கோப்பை மற்றும் சான்றிதழ்களை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஒய்வு பெற்ற இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் இயக்குனர் ரங்கச்சாரி வழங்கி கவுரவித்தார்.

நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை மா அபாகஸ் நிறுவனத்தின் தமிழ்நாடு பிசினஸ் டெவலப்மெண்ட் அதிகாரி பெஹல் பெர்க் செய்திருந்தார்.

இதில் மாணவர்களின் பெற்றோர்கள், மா அபாகஸ் பிரான்சிஸ் நிர்வாகிகள் என ஏராளாமானோர் கலந்துப்கொண்டனர்



# கீழக்கோட்டையில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக 2000 பனை மர விதைகள் சேகரிப்பு மகிழ் முற்றம் அணிகளுக்கு பாராட்டு விழா

காளையார் கோவில், அக்.09- சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை ப்பள்ளி கீழக்கோட்டையில் சுற்றுச்சூழல் மன்றம் தேசிய பசுமை படை வழிகாட்டுதலின்படி மகிழ் முற்றம் மாணவ அணி குழுக்களுக்கு பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். குறிஞ்சி சிவப்பு முல்லை மஞ்சள் நெய்தல் பச்சை மருதம் நீலம் பாலை வெள்ளை ஆகிய வண்ண ங்களில் பிரிக்கப்பட்ட அணிகளின் த லைவர்கள் உறுப்பினர்களின் பணிகளைப் பாராட்டி சிறந்த அணியாக முல்லை மஞ்சள் அணியின் கொடி ஏற்றப்பட்டு தலைவர் சிவகார்த்திகேயன் துணைத்தலைவர் தன்ஷிகா சிறப்பிக்கப்பட்டனர். ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் மாணவர் குழு பொறுப்பாசிரியர் மாணவர் குழு மாணவத் தலைவர்கள் வகுப்பு தலைவர்கள் என அனைவரையும் தலைமை ஆசிரியை தெய்வானை வெகுவாகப் பாராட்டினார். ஒவ்வொரு மாணவர் குழு தலைவர்களும் தங்களின் கொடிகளை கையில் ஏந்தி அணிவகுத்து பேரணியாக வலம் வந்தனர். பள்ளியில் மாணவர்களின் வருகை கற்றல் திறன் மன்றங்கள் கலைத் திருவிழா மரக்கன்றுகள் நடுதல் பனை விதை நடுதல் ஆகிய அனைத்து செயல்பாடு களையும் சிறப்பாக செய்திட அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தமிழக அரசின் கனவு திட்டமான பனை மர விதைகள் நடும் திட்டத்திற்காக மகிழ் முற்றம் அணிகள் தன்னார்வமாக விடுமுறை நாட்களில் 2000 க்கும் மேற்பட்ட பனைமர விதைகளை சேகரித்து சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் மற்றும் தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமியிடம் ஒப்படைத்தனர். 200 மேற்பட்ட பனை மர விதைகளைச் சேகரித்த சரண் சிறப்பாக பாராட்டப் பெற்றார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியை வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு சமையல் உதவியாளர் அஞ்சலை கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பனையக்குறிச்சி ஊராட்சி வார்டு எண் 1 முதல் 5 வரை உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பனையக்குறிச்சி சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



# ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, அக்.09-

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் 3, வார்டு எண்.77, மண்டலம் 5 வார்டு எண்.96, 99 ஆகிய வார்டுப் பகுதிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை பார்வையிட்டார்கள்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.19 கூடல்புதூர் ஐஸ்வர்யம் மகாலிலும், மண்டலம் 3 வார்டு எண்.77, சுப்பிரமணியபுரம் பகுதிக்கு ராஜா தெரு (பாலா குருகுலம் அருகில்) கற்பகவேல் மகாலிலும், மண்டலம் 5 வார்டு எண்.96 மற்றும் 99 ஆகிய பகுதிகளுக்கு திருப்பரங்குன்றம் ஜி.எஸ்.டி.ரோடு பகுதியில் உள்ள நகரத்தார் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை மாண்புமிகு மேயர் பார்வையிட்டார்கள், தொடர்ந்து இம்முகாமில் ஆதார் அட்டையில் திருத்தம் செய்ய வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கும் மற்றும் பிறப்பு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட ஆதார் அட்டை மற்றும் பிறப்பு சான்றிதழை அம்மனுதாரர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், உதவி ஆணையாளர்கள் திரு.பிரபாகரன், திருமதி. இராதா, திரு.மணியன், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், சுகாதார அலுவலர் திரு.திருமால், உதவிப்பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ராஜ்பிரதாபன், திரு.சிவா, திருமதி. விஜயா, திரு.பாபு, உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




■ கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தலைமையில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துவது குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம் இன்று (08.10.2025) நடைபெற்றது. உடன் இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.மணிமேகலை, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பொற்கொடி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.திருப்பதி உட்பட பலர் உள்ளனர்

# ஜவுளி நகரமான கோவையில் ராம்ராஜ் காட்டன் 20வது ஷோரூம் திறப்பு


கோவை, அக்.09-

கோவை,பாரம்பரிய இந்திய ஆடைகளுக்கு நம்பகமான பெயராக திகழும் ராம்ராஜ் காட்டன் புதிய ஷோரூம் கோவை காந்திபுரம் 100 அடி சாலை பகுதியில் துவங்கியது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கல்வியாளர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர், கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி. பக்தவத்சலம் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் ராம்ராஜ் காட்டனின் நிறுவனர் மற்றும் தலைவர் கே.ஆர். நாகராஜன், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் என். பழனிசாமி, இணை நிர்வாக இயக்குனர் எஸ். அஸ்வின் மற்றும் ஹீரோ ஃபேஷன் நிர்வாக இயக்குனர் சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். முக்கிய பிரபலங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் என ஏராளமான நபர்கள் கலந்து கொண்டனர். கோவையைச் சேர்ந்த எமரால்டு ஜூவல் இண்டஸ்ட்ரி இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் கே. ஸ்ரீனிவாசன் ஆடைகளை வாங்கி முதல் விற்பனையை துவக்கி வைத்தார். புதிதாக திறக்கப்பட்டுள்ள இந்த ஷோரூமில் வெள்ளை வேட்டிகள் மற்றும் சட்டைகள் முதல் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பண்டிகை கால ஆடைகள் மற்றும் பல்வேறு வகையிலான புதிய ஆடை ரகங்கள் வரை ஏராளமாக உள்ளன.




அதனைத்தொடர்ந்து ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் கே.ஆர். நாகராஜன் கூறுகையில் கோயம்புத்தூரில் எங்கள் 20வது ஷோருமைத் திறப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. கோயம்புத்தூர் எங்களுக்கு எப்போதும் சிறப்பு வாய்ந்த நகரமாகும். மேலும் எங்கள் வாடிக்கையாளர்கள் பல ஆண்டுகளாக எங்களுக்கு அளித்து வரும் ஆதரவிற்கு நாங்கள் உண்மையிலேயே நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம். அவர்களின் ஊக்கமே எங்கள் பயணத்தின் அடித்தளமாக இருந்து வருகிறது, மேலும் இந்த புதிய ஷோரூம் எங்களின் பலவித ஆடை ரகங்களை அவர்களுக்கு இன்னும் நெருக்கமாகக் கொண்டுவருவதற்கான ஒரு வழியாகும். திருமணங்கள், திருவிழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் என அனைத்திற்கும் ஏற்ற ஆடைகள் இங்கு ஏராளமாக உள்ளன பாரம்பரியத்தை போற்றும் வேட்டி சட்டைகளை பல்வேறு வண்ணங்களில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்று தெரிவித்தார்.

இதன் திறப்பு விழாவில் ராம்ராஜ் காட்டன் தலைவர் கே.ஆர். நாகராஜன், சுயம்வர கிராண்ட், பரிணயம் கிராண்ட், சங்கல்பம் கிராண்ட் மற்றும் லக்ஸ் செட் ஆகிய கிராண்ட் கலெக்ஷ ன்களையும் அறிமுகம் செய்து வைத்தார். இந்த நேர்த்தியான வேட்டிசட்டை செட்கள் ஜாக்கார்டு பார்டர்களுடன் தரமான துணிகளில் தயாரிக்கப்பட்டு உள்ளன. அவை திருமணங்கள், திருவிழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வேட்டிசட்டைகள், ஸ்கை ப்ளு, கோல்ட், மோஸ் கிரீன் மற்றும் ரோஸ் கோல்ட் போன்ற வண்ணங்களில் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# பழநி முருகன் கோயிலில் கந்தசஷ்டி விழா அக்.22ம் தேதி தொடக்கம்

பழநி, அக்.09-

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழா வரும் 22ம் தேதி காப்புக் கட்டுதலுடன் தொடங்குகிறது. திண்டுக்கல் மாவட்டம் பழநி மலைக்கோயிலில் கந்தசஷ்டி விழா வரும் 22ம் தேதி நண்பகல் 12 மணிக்கு உச்சிகாலத்தில் தொடங்குகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் வரும் 27ம் தேதி மாலை நடைபெற உள்ளது.

அன்று அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்படும். மாலை 5.30 மணிக்கு நடக்கவேண்டிய சாயரட்சை பூஜை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு சின்னக்குமாரசுவாமி அசுரர்களை வதம்புரியும் பொருட்டு, மலைக்கொழுந்து அம்மனிடம் வேல் வாங்குதல் நிகழ்ச்சியுடன் சந்நிதி அடைக்கப்படும்.

தொடர்ந்து, திருஆவினன்குடி கோயிலில் பராசக்தி வேலுக்கு பூஜை செய்யப்பட்டு, மாலை 6 மணிக்கு மேல் வடக்கு கிரிவீதியில் தாரகாசூரன் வதமும், கிழக்கு கிரிவீதியில் பானுகோபன்சூரன் வதமும், தெற்கு கிரிவீதியில் சிங்கமுகாசூரன் வதமும், மேற்கு ரதவீதியில் சூரபத்மன் வதமும் நடைபெற உள்ளது.

வரும் 28ம் தேதி மலைக்கோயிலில் வள்ளி தேவசேனா சமேத சண்முகருக்கும், பெரியநாயகியம்மன் கோயிலில் வள்ளி தேவசேனாசமேத முத்துக்குமாரசுவாமிக்கும் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது.

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், அக்.09-

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட விதிகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் 02.10.2025 காந்தி ஜெயந்தி தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெற வேண்டுமென வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு 02.10.2025 காந்தி ஜெயந்தி தினத்தன்று நடைபெறவிருந்த கிராமசபைக் கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு 11.10.2025 அன்று காலை 11.00 மணியளவில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும், உரிய வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து கிராம சபை கூட்டம் நடத்திட இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜித் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த கிராம சபைக் கூட்டத்தில் 1) கிராம மக்களின் 3 அத்தியாவசியமான தேவைகளை தேர்வு செய்து கிராமசபையில் ஒப்புதல் பெறுதல், 2) சாதிப் பெயர்கள் கொண்டகுக்கிராமங்கள், சாலைகள் மற்றும் தெருக்கள் பெயரை மாற்றுதல் குறித்து விவாதித்தல், 3) கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல் 4) கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை 5) ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல் 6) கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல் 7) வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல் 8) சபாசார் செயலி செயல்பாடுகள் 9) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், 10) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 11) தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், 12) தொழிலாளர் துறை 13) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 14) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், 15) இதர பொருட்கள் குறித்து கிராம சபையில் விவாதித்திட அரசு தெரிவித்துள்ளபடியால் பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இந்த கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை

# சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் கண்ணாடிப்பாலம் அமைத்து, சுற்றுலாவை மேம்படுத்தியமைக்காக நல்லாளுமை விருது மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா அவர்களுக்கு வழங்கப்பட்டது

கன்னியாகுமரி, அக்.09-

தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்வதற்கு ஏதுவாக திருவள்ளுவர் சிலையின் வலது பக்கத்திலிருந்து எதிரே உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை ரூ.37 கோடி மதிப்பில் கண்ணாடி இழை தரைத்தள நடைப்பாதை அமைப்பதற்கான ஆணையினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையிடம் ஒப்படைந்தார்கள்.

மேலும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியில் கடந்த 2000ம் ஆண்டு, உலகமே போற்றுகின்ற விதத்திலே கன்னியாகுமரி கடலின் நடுவில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது. திறக்கப்பட்டு 25 வருடம் நிறைவடைந்ததையொட்டி, அய்யன் திருவள்ளுவருக்கு விழா நடத்தியதோடு, கண்ணாடி பாலத்தினையும் விரைவாக முடித்து சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துறை அமைச்சருக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்களுக்கும் அறிவுறுத்தியதின் படி, இரவு பகல் பாராமால் மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் பணியினை வேகமாக முடித்து, அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்ட நாளன்று சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தற்போது இந்த கண்ணாடி பாலத்தினை பார்வையிட உள்நாட்டு சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் ஆர்வமுடன் வருகை தந்து வருகின்றனர்.



மேலும் கன்னியாகுமரி சுற்றுலாத்தளங்களில் இந்த கண்ணாடி பாலமானது முதன்மையாக விளங்கி வருவதோடு, வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியாகுமரியில் சுற்றுலா கட்டமைப்பான திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை கண்ணாடிப்பாலம் அமைத்து சுற்றுலாவை மேம்படுத்தியமைக்காக நல்லாளுமை விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.இரா. செல்வராஜ், அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்களுக்கும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அனைவருடைய அயராது உழைப்பையையும் பாராட்டும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.08.2025 அன்று நடைபெற்ற 79வது சுதந்திர தின விழாவில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் அவர்களுக்கு நல்லாளுமை (Best Practices Award) வழங்கி கௌரவித்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் 15.08.2025 அன்று மாவட்டத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டுமையால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் கலந்துகொள்ள இயலவில்லை. அதனடிப்படையில் சென்னை தலைமை செயலகத்தில் தமிழ்நாடு அரசு தலைமை செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நல்லாளுமை விருதினை வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத்தளத்திற்கு நல்லாளுமை விருதினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், பொதுமக்களின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக்கொண்டார்கள். மேலும் இக்கண்ணாடி பாலம் அமைவதற்காக இரவு பகல் பாராமால், பணியில் ஈடுப்பட்ட நெடுஞ்சாலைத்துறை, சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம், கன்னியாகுமரி நகராட்சி, மீன்வளத்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

# கைவினைப் பொருட்கள் கண்காட்சி 09.10.2025 அன்று முதல் நடைபெற உள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்

கடலூர், அக்.09-

கைவினைபொருட்கள் உலகில் தனியானதொரு இடத்தைப் பிடித்துள்ள, பூம்புகார் என்ற பெயரால் அனைவராலும் அறியப்படும், தமிழ்நாடு அரசு நிறுவனமான, தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 1973ல் துவக்கப்பட்டு, தொன்மையான கலைகளை பாதுகாப்பதோடு கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதை தமது முக்கியம் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கைவினைஞர்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில் தமிழகத்திலும் மற்றும் புதுடெல்லி, கொல்கத்தா உட்பட 13 விற்பனை நிலையங்களை நடத்தி வருவதோடு, கூடுதல் சந்தை வாய்ப்பாக இந்தியா முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் பலவகைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இது தவிர தமிழகத்தில் சொந்தமாக ஏழு உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகிறது.

இக்கண்காட்சி திட்டங்களில் ஒன்றாக, இந்நிறுவனம் தற்சமயம் “கைவினைபொருட்கள் கண்காட்சி2025” என்ற பெயரில் சிறப்பு கைவினைபொருட்கள், கைத் திறன் துணி வகைகள், நகை வகைகள் மற்றும் கைத்திறன் அறைகலங்கள் கண்காட்சி மற்றும் விற்பனையை லிக்னைட் ஹால் , (என் , எல் , சி) ஙிறீஷ்நீளீ 11 டவுன்ஷிப் , நெய்வேலி 09.10.2025 முதல் 22.10.2025 முடிய நடத்துகிறது. இக்கண்காட்சி 09.10.2025 மாலை 06.00 மணியளவில் துவக்கிவைக்கப்படுகிறது.

இக்கண்காட்சியில் பஞ்சலோக சிலைகள், மரச்சிற்பங்கள், பித்தளை விளக்குகள், தஞ்சை கலைத்தட்டுகள், தஞ்சாவூர் ஓவிங்கள் களிமண், கல் மற்றும் காகிதக்கூழ் பொம்மைகள் மற்றும் நூக்கமர மேஜை நாற்காலிகள் தேக்குமர பூஜை மண்டபங்கள், சனல் பொருட்கள் ருத்ராட்சம், அதிநவீன நகை வகைகள், ஜெய்ப்பூரின் ஓவியங்கள் மற்றும் மர வேலைப்பாட்டிலான பரிசுப் பொருட்கள், தோல் பொருட்கள், அகர்பத்திகள், மதுரை சுங்கடி புடவைகள், வாரனாசியில் தருவிக்கப்பட்ட ஜரிகை துணி வகைகள், ராஜஸ்தான் கைத்தறிப படுக்கை விரிப்புகள், லக்னோசிக்கன் துணி வகைகள், சுரிதார் வகைகள், பலின்குத்துள் சிலைகள், சுட்டமன் சிற்பங்கள்,பல்வேறு மாநில சிறப்பு செயற்கைக்கல் நகை வகைகளும் முத்து வகைகளும் கோரைப்புல் பாய்கள் மற்றும் கைத்திற துணி வகைகளும் இக்கண்காட்சிக்கென சிறப்பாக தருவிக்கப்பட்டுள்ளன. பல மாநிலங்க ளிலிருந்தும் கைவினைஞர்கள் நேரிடையாக வருகை தந்து தங்களுடைய பொருட்களை விற்பனைக்கு வைத்துள்ளது.

இக்கண்காட்சி 09.10.2025 முதல் 22.10.2025 வரை காலை 10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை ஞாயிறு உட்பட நடைபெறும். இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் கைவினைப் பொருட் களுக்கு 10% சதவிகிதம் சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. அனைத்து கடன் அட்டைகளும் எவ்வித சேவைக்கட்டணம் இன்றி ஏற்றுக்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




# வேலூரில், 24 மணி நேரமும் மக்களுக்கான சேவையில் ஈடுபடும் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம்

வேலூர், அக்.09-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், , 24 மணி நேரமும் மக்களுக்கான சேவையில் ஈடுபடும் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அகவிலைப்படிக்கூட இல்லாமல் 12 மணி நேரம் வேலை பார்க்கும் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்களுக்கு தமிழக அரசு ஏற்கனவே வழங்கிவிட்ட 2025ம் ஆண்டிற்கான 16% சதவிகித ஊதிய உயர்வில் 10% சதவிகித ஊதியத்தை மட்டும் EMRI-GHS தனியார் நிர்வாகம் மறைமுக சம்பள வெட்டை அமுல் படுத்துவதாகவும்,

108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்களின் 2025 26 வருடாந்திர ஊதிய உயர்வு கோரிக்கை மீது பேச்சுவார்த்தை நடத்தி விலைவாசி உயர்வுக்கு ஏற்ற அடிப்படையில் ஊதியத்தை உயர்த்தி வழங்கிடவும்,

108 ஆம்புலன்ஸ்களின் கோளாறுகளை உடனுக்குடன் முறையாக சரி செய்யாமல் பல நூறு 108 ஆம்புலன்ஸ்கள் கோளாறுடன் இருப்பதாகவும்,

ஓட்டுனர் பற்றாக்குறை காரணமாக பல ஆம்புலன்ஸ்கள் பயன் படுத்த முடியாமல் நிறுத்தி வைக்க ப்பட்டு இருப்பதாகவும் அதனை சரி செய்து ஆள் பற்றாகுறையை போக்கவேண்டும்.

உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வேலூர் ஆட்சியர் அலுவலகம் அருகே 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் சங்கத்தினர் 50க்கும் மேற்பட்டவர்கள் தமிழக அரசுக்கு எதிராகவும், EMAI- GHS நிர்வாகத்திற்கு எதிராகவும், ஊழியர்கள் பேனர் மற்றும் பதாகைகளையும் கையிலேந்தி மாபெரும் கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாம்

# 08.10.2025 குண்டடம், அவினாசி, பல்லடம், குடிமங்கலம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மற்றும் வெள்ளகோயில் நகராட்சி பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தகவல்

திருப்பூர், அக்.09-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப்பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தினை 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள். அதனை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 325 முகாம்கள் நடைபெற உள்ளது. குறிப்பாக, முதல்கட்டமாக 120 முகாம்கள் 15.07.2025 முதல் 14.08.2025 வரையிலும், இரண்டாம் கட்டமாக 96 முகாம்கள் 15.08.2025 முதல் 14.09.2025 வரையிலும் நடைபெற்றது. மேலும், மூன்றாம் கட்டமாக 96 முகாம்கள் 15.09.2025 முதல் 14.10.2025 வரையிலும் மற்றும் நான்காம் கட்டமாக 13 முகாம்கள் 15.10.2025 முதல் 14.11.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் மூன்றாம் கட்டமாக நாளை 08.10.2025 குண்டடம் ஊராட்சி ஒன்றியம் சடையபாளையம் ஊராட்சிக்கு ஈஸ்வர செட்டிபாளையம் சமுதாய கூடத்திலும், அவினாசி ஊராட்சி ஒன்றியம், பொங்கலூர் ஊராட்சிக்கு தாளக்கரை லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவில் திருமண மண்டபத்திலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், மாணிக்காபுரம் ஊராட்சிக்கு அம்மாபாளையம், காளியப்ப மஹாலிலும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கொண்டம்பட்டி ஊராட்சிக்கு அம்மாபட்டி சுய உதவிக்குழு கட்டத்திலும், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சின்ன குமாரபாளையம், குருவப்பநாயக்கனூர் ஊராட்சிகளுக்கு ஆலாம்பாளையம் ஐஸ்வர்யா மஹாலிலும், வெள்ளகோயில் நகராட்சி வார்டு எண் 20, 21 ஆகிய பகுதிகளுக்கு வெள்ளக்கோவில் கரட்டுப்பாளையம், ஸ்ரீ முருகன் மஹாலிலும் நடைபெறவுள்ளது.

எனவே, திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைபெறவுள்ள “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் உங்கள் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் தங்கள் மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ்நாரணவரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.



# போதை பொருள் வைத்திருந்தவர் கைது

சென்னை, அக்.09-

ஆவடி காவல் ஆணையரகத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி ஆவடி காவல் ஆணையாளர் உயர்திரு.சங்கர் இ.கா.ப., அவர்களின் உத்தரவுபடியும், திருமதி பவானீஸ்வரி இ.கா.ப., காவல் கூடுதல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்களின் உத்தரவு படியும், அம்பத்தூர் மதுவிலக்கு அமல் பிரிவு உதவி ஆணையாளர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சசிகுமார் அவர்கள் தலைமையில் தனிப்படை போலீசார் இன்று 07.10.2025 ம் தேதி செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு எல்லைக்குட்பட்ட மீஞ்சூர், செங்குன்றம், மணலி, அத்திப்பட்டு, எண்ணூர் ஆகிய பகுதிகளில் கஞ்சா எனும் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதை தடுப்பதற்காக தீவிர சோதனையில் ஈடுபட்டு மொண்டியம்மன் சோதனை சாவடி அருகே சோதனையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகப்படும் படியாக இருந்த நபர் திவ்யா, பெண். வ.28, க.பெ சதீஷ், தெற்கு தெரு, குறவகுடி, உசிலம்பட்டி, மதுரை 625532 என்ற முகவரியை சேர்ந்தவர் என்று தெரியவந்தது இவர் வைத்திருந்த ஷோல்டர் பையை சோதனை செய்த போது எதிரி திவ்யா. பெண், வ.28, க.பெ சதீஷ் என்பவரிடம் 11.½ கிலோ கிராம் இருந்ததை கைப்பற்றி எதிரியை கைது செய்து எதிரி மீது செங்குன்றம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய எண் .156/2025, u/s 8(C) r/w 20(b) (ii) (B), NDPS ACT வழக்குபதிவு செய்து மேற்படி எதிரியை குற்றவியல் நடுவர் 2 நீதிமன்றம் பொன்னேரி அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரி புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



■ வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மோர்தானா அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் நீர்வளத்துறை அமைச்சர்.துரைமுருகன், கடந்த (07.10.2025) அன்று மோர்தானா அணையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமுலு விஜயன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் பவளக்கண்ணன், செயற்பொறியாளர் வெங்கடேஷ், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார். ஒன்றியக்குழுத்தலைவர்கள் என்.இ.சத்யானந்தம் (குடியாத்தம்), திரு.சித்ரா ஜனார்தனன் (பேர்ணாம்பட்டு). ரவிசந்திரன் (கீ.வ.குப்பம்). வே.வேல்முருகன் (காட்பாடி), குடியாத்தம் நகர்மன்ற தலைவர் சௌந்தரராசன்,பேர்ணாம்பட்டு நகர்மன்ற துணைத்தலைவர் ஆலியார் ஜுபேர் அஹ்மத் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றி கழகத்தின் அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வரும் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்..



# பல்லாவரத்தில் கருணை இல்லம் வெல்பர் டிரஸ்ட் சார்பில் ஆயுத பூஜை விழா நடைபெற்றது

பல்லாவரம், அக்.09-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த மலகனந்தபுரத்தில் கருணை இல்லம் வெல்பர் டிரஸ்ட் சார்பில் ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கருணை இல்லம் அறக்கட்டளையின் நிறுவன இயக்குனர் சி.அமுதா, கருணை இல்லம் வெல்பர் டிரஸ்ட் நிறுவனர் தாமோதரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளி குழந்தைகள் கலந்து கொண்டு நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு இளம் வழக்கறிஞர்கள் மாநிலத் தலைவர் வழக்கறிஞர் நிஷா, கௌரவ தலைவர் டி.வி.ராஜா, அக்கர் ரெஸ்டாரன்ட் உரிமையாளர் அசோக் குமார், ஆகியோர் கலந்துகொண்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை நிர்வாகிகள் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# கானாடுகாத்தான் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்: சேர்மன் ராதிகா, பள்ளத்தூர் கே. எஸ். ரவி, வைஸ் சோலைராஜன், செட்டிநாடு பாலு ஆகியோர் பங்கேற்றனர்

காரைக்குடி, அக்.09-

சிவகங்கை மாவட்டம் கானாடுகாத்தான் பேரூராட்சி வார்டு 7, 8, 9, 10, 11 ஆகிய வார்டுப்பகுதிகளை ஒன்றிணைத்து உங்களுடன் ஸ்டாலின் நிகழ்வு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது... பேரூராட்சி தலைவரும், சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளருமான ராதிகா ராமச்சந்திரன், திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், பள்ளத்தூர் கே.எஸ். ரவி, பேரூராட்சி துணைத் தலைவர் சோலைராஜன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப் பாளரும், பேரூராட்சி கவுன்சிலருமான செட்டிநாடு பாலு, வட்டா ட்சியர் ராஜா, பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் குத்துவிளக்கு எற்றி வைத்து தொடங்கி வைத்தனர்...

தமிழ்நாடு அரசின் 13 துறைகள் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்து 43 மேற்பட்ட சேவைகளை வழங்கி வருகிறது..

இது பொதுமக்களின் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத ஜீவாதாரப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்வு காண பேருதவி புரிகிறது.

பொதுமக்கள் பலரும் தமிழக அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்...

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜெய்கணேஷ், அன்புக்கரசி, வசந்தி, பாண்டிச்செல்வம், சுவேகா, உள்ளிட்ட அரசின் பல்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...



■ மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் சோளங்குருணி,குசவன்குண்டு, நல்லூர் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை தாசில்தார் கவிதா,வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நீலாதேவி,ஊராட்சி செயலாளர்கள் நல்ல முத்துமாரி நடுக்காடு, ஜெயவீரபாண்டி மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சுயசார்புள்ள இந்தியாவிற்காக பழைய தங்க நகைகளை மாற்றும் திட்டத்தை முன்னெடுக்கும் தனிஷ்க் மற்றும் சச்சின் டெண்டுல்கர்

திருவண்ணாமலை, அக்.09-

டாடா குழுமத்தின் ஒரு அங்கமான தனிஷ்க், இந்தியாவில் அதிக நம்பிக்கைக்குரிய ஆபரண பிராண்டாக திகழும் நிலையில் இந்நாட்டில் பழைய தங்க நகைகளை புதிய நகைகளாக மாற்றும் இந்நாட்டின் மிகப்பெரிய இயக்கத்தை தொடங்கி தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இந்தியாவின் உண்மையான தங்க இருப்புகள், தங்கச் சுரங்கங்களில் இல்லை. மாறாக, நாடெங்கிலும் உள்ள இந்திய மக்களின் வீடுகளில் தான் அவைகள் இருக்கின்றன.

இந்திய இல்லங்களில் மட்டும் 25,000 டன்கள் தங்கம் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் இதே நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் தேவையில் ஏறக்குறைய 99% என்ற அளவிற்கு தங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.



இந்த முரண்பாடுக்கு தீர்வு காணும் விதத்தில் தங்களிடம் ஏற்கனவே இருக்கின்ற தங்க ஆபரணங்களின் மதிப்பை வெளிக்கொணருமாறு குடும்பங்களை தனிஷ்க் ஊக்குவிக்கிறது; பழைய தங்க நகைகளை புதிய, நவீன வடிவமைப்புகளாக மாற்றிக் கொள்வதன் மூலம் நம் நாடு தங்க இறக்குமதிக்காக பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை குறைக்கிறது. இந்த இயக்கத்தின் மைய மதிப்பீடு களை முன்னிலைப்படுத்தவும் நம்பிக்கை, நேர்மை மற்றும் ஒருமைப்பாட்டுடன் ஒருங்கிணைத்துப் பார்க்கப்படுகின்ற பிரபல ஆளுமையான கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் உடன் தனிஷ்க் இணைந்திருக்கிறது. 2025 அக்டோபர் 21ம் தேதி வரை அனைத்து கேரடேஜ்களிலும் (9 KT என்ற குறைந்த அளவு வரை) பழைய தங்க நகைகளை மாற்றும்போது பூஜ்ய (0%*) பிடித்தம் என்ற சிறப்பு சலுகையை நுகர்வோர்களுக்காக தனிஷ்க் முதன் முறையாக வழங்குகிறது. தேச நலன் மீது அக்கறையுடன் சுயசார்பை ஆதரிக்கும் இந்த சிறப்பான முயற்சியில் ஒவ்வொரு இந்தியரும் பங்கேற்பதை இத்திட்ட த்தின் மூலம் தனிஷ்க் எளிதாக்கியிருக்கிறது.

கடந்த பல ஆண்டு களாக, தனிஷ்க் ன் தங்க பரிமாற்ற திட்டத்தில் 30 இலட்சத்திற்கும் அதிகமான இந்தியர்கள் பங்கேற்று ஏறக்குறைய 1.7 இலட்சம் கிலோ தங்கத்தை மறுசுழற்சி செய்திருக்கின்றனர்.

டைடன் கம்பெனி லிமிடெட் ன் ஆபரண பிரிவின் தலைமை செயலாக்க அதிகாரி அஜாய் சாவ்லா கூறியதாவது: “ஒரு குடும்பமானது, பூட்டப்பட்டு வைத்திருந்த ஒரு கிராம் தங்கத்தை மாற்றுகின்ற ஒவ்வொரு முறையும் தங்களுக்காக அதிகரித்த மதிப்பை பெறுகின்றனர். பல தலைமுறைகளாக அன்புடன் வழங்கப்படும் தங்கம், பரிசாக வழங்கப்பட்டு, இனிய நினைவுகளோடு போற்றப்படுகிறது; அனைத்து குடும்பங்களும் சார்ந்திருக்கும் ஒரு பொருளாதார சக்தியாகவும் இது இருக்கிறது, தனிஷ்க் ன் தங்க எக்ஸ்சேஞ்ச் திட்டம், இந்த பாரம்பரியத்தை நேர்த்தியாக புதுப்பிக்க ஒரு வெளிப்படையான மற்றும் நம்பகமான வழிமுறையை குடும்பங்களுக்குத் தருகிறது. இந்த ஒவ்வொரு பரிமாற்றமும் கடந்தகால பழைய ஆபரணங்களை, இன்றைய காலத்திற்கேற்ற நவீன வடிவமைப்புகளாக மாற்றுவதோடு, தங்க இறக்குமதிகள் மீது நமது நாடான இந்தியாவை சார்ந்திருப்பதை குறைப்பதனால் ஒரு மிகப்பெரிய இலட்சியத் திற்கும் பங்களிப்பை வழங்குகிறது. எனவே, என்னைப் பொறுத்தவரை இந்த தங்க எக்ஸ்சேஞ்ச் திட்டம், ஒவ்வொரு இந்தியரும் பயன்படுத்த வேண்டிய, அதன்மூலம் வெற்றியை தனக்கும், நாட்டிற்கும் சாத்தியமாக்குகின்ற ஒரு சிறந்த முன்னெடுப்பாக இருக்கிறது.”

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161